**O.S.No.171/2015**

**Date:26.02.2019**

**வாதி தரப்பு சாட்சி 2 – குமார் என்ற செந்தில்குமார்,த-பெ.மாலையம்பலம்**

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கின் எத்தனையாவது வாதி என்றால் தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த காலத்தில், வழக்குரையில் என்ன விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று படித்துப் பார்த்து கையெழுத்துச் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்துக்கள் வாதிகளாகிய எங்களுக்குப் பாத்தியம் என்று விளம்புகைப் பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல, கேட்டுள்ளோம். 1ம் பிரதிவாதி சாவித்திரியம்மாள் இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.1-2012 வழக்கில் தீர்ப்பு வழங்கியதில், அதை ரத்து செய்யக் கோரி பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் சரிதான். இந்த தீர்ப்பின் மீது மதுரை சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டு, அது 3ம் தரப்பினரால் உரிய அனுமதி கோராமல் தாக்கல் செய்திருந்ததால், அந்த மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. மலைச்சாமி என்பவர் எனக்கு என்ன வேண்டும் என்றால் பக்கத்து ஊர்காரர், செல்வராஜ் என்ற பெரியசாமி யார் என்றால் தெரியாது. ராஜலெட்சுமி என்பவர் யார் என்றால் தூரத்து சொந்தம் ஆகும். பார்வதி யார் என்றால் அவரும் தூரத்து சொந்தம், செல்லப்பன் யார் என்றால் என் அண்ணன் ஆவார். லெட்சுமி என் அக்கா ஆவார். குமார் என்ற செந்தில்குமாராகிய நான் மேல்முறையீட்டில் 10ம் நபராக உள்ளேன் என்றால் சரிதான். எனவே எனக்கு தீர்ப்பு பற்றி அப்போதே தெரியும் என்றாலும், தெரிந்துதான் மேல்முறையீடு செய்தேன் என்றாலும் தெரியாது. என் அண்ணன் செல்லப்பன் என்பவர்தான் மேற்படி வழக்கின் வக்காலத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கிச் சென்றார். மேற்படி வக்காலத்து எதற்காக என்று கேட்டேனா என்றால் கேட்கவில்லை. இந்த வழக்கில் மொத்தம் எத்தனை இலக்கச் சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அதில் தாவாச் சொத்துக்களில் 2வது இலக்கமாக அசல் வழக்கு எண்.1-2012ன் தாவாச் சொத்துக்களை காண்பித்துளளேன் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.1-2012 வழக்கில் சாவித்திரியம்மாள், மோளப்பிச்சி என்பவரது மகள் ஏலம்மாளின் மகள் என்ற வாரிசாக கேட்டு வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் அவரது தாய்மாமன் சந்தனம் சேர்வை என்பவருக்கம் வாரிசாக கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் தெரியாது. நர்ன இந்த வழக்கில் மோளப்பிச்சி என்ற முத்தம்மாளின் சொத்துக்கள் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.1-2012 வழக்கில் மோளப்பிச்சி என்பவர் இறந்தது 13.10.1946 என்று தெரிவித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் தெரியாது. அந்த வழக்கில் மோளப்பிச்சியின் மகள் ஏலம்மாள் இறந்தது 29.10.2011 என்று தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. சந்தனம சேர்வை

என்பவர் 10.05.1992ல் இறந்ததாக அந்த வழக்கில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. அந்த வழக்கானது மேலூர் வட்டாட்சியரிடம் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்யப்பட்டு, அவர் கொடுத்த 13.12.2011ம் தேதியிட்ட குறிப்பாணையின்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்றால் தெரியாது. மோளப்பிச்சி என்ற முத்தம்மாளின் தாயார் பெயர் கருப்பாயி என்றால் சரிதான். தகப்பனார் பெயர் பெரியசாமி அம்பலம் என்றால் பெரியசாமி என்ற மலையாண்டி ஆகும். பெரியசாமி என்ற மலையாண்டி என்பவருக்கு இந்நீதிமன்றத்தில் என் தரப்பில் ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. அந்த மோளப்பிச்சியின் தகப்பனார் பெயர் மலையாண்டி அம்பலம் என்றால் தெரியாது. கணவர் பெயர் சுப்பிரமணி என்றாலும், தாயார் அங்கம்மாள் என்றாலும் தெரியாது. மோளப்பிச்சி என்ற முத்தம்மாளின் கணவர் பெயர் மாலையம்பலம் என்றால் சரிதான். இவர் எந்த தேதியல் இறந்தார் என்றால் தெரியாது. நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எங்கள் சொத்துக்களையும் சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருந்ததால், இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். நான் இந்த வழக்கில் மோளப்பிச்சி என்ற முத்தம்மாளின் வாரிசு என்று விளம்புகைப் பரிகாரம் கேட்கவில்லை என்றாலும், அந்த சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதாகவும் பரிகாரம் கேட்கவில்லை என்றாலும், சரியல்ல. வழக்குரையில் தாவாச் சொத்துக்களுக்கு பட்டா எண் குறிப்பிட்டுள்ளோமா என்றால் குறிப்பிட்டுள்ளோம். வழக்குரை சாட்சிக்கு காண்பித்து, பட்டா எண் எந்த இடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொல்ல முடியாமா என்றால் தற்போது சொல்ல முடியாது. எனக்கு படிக்கத் தெரியாது. வா.சா.ஆ.14 ஆவணம் சான்றிட்ட நகலாக தாக்கல செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணம் என் பெயரில் நகல் பெறப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.14ன் அசல் ஆவணம் யாரிடம் உள்ளது என்றால் என் கைவசம் உள்ளது. அசல் ஆவணத்தை ஏன் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தேடிப்பார்க்கும்போது தற்போதுதான் என்னிடம் இருப்பது தெரிய வந்தது. அசல் பத்திரத்தை தாக்கல் செய்யாதது குறித்து இந்த வழக்கிலோ, எனக்கு முன்பு சாட்சி சொன்னவரோ எந்தவிதமான விளக்கமும் சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.11 முதல் 13 வரையிலான வரி ரசீதுகள் 18.03.2008, 08.05.2009, 08.06.2018 ஆகிய தேதிகளிட்டதில், சொல்லப்பட்டுள்ள பட்டா எண்கள் இந்த வழக்கில் சொல்லப்படவில்லை என்றாலும், தாவாச் சொத்துக்களுக்கும் இந்த ரசீதுகளுக்கும் சம்பந்தம் இலல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள பட்டா எண் குறித்து வழக்குரை, சொத்து விபரம் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்படவில்லை என்றாலும், மேற்படி ஆவணத்திற்கும், தாவாச் சொத்திற்கம் சம்பந்தம் இலல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 பாகப்பிரிவினை பத்திரத்தில் தாவாச் சொத்துக்கள் உள்பட நான் சொல்லும் சொத்துக்கள் எப்படி எங்களுக்குப் பாத்தியம் என்பதற்கான மூலப் பத்திரம் குறித்து சொல்லப்படாததால், வா.சா.ஆ.9 பத்திரம் மோசடியான எண்ணத்துடன் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் தரப்பில் ஏற்கனவே சாட்சி விசாரிக்கப்பட்டுள்ள நிலையில், விட்டுப்போன வாக்குமூலங்களை நிரப்புவதற்காக கூடுதலாக ஆவணங்களை தாக்கல் செய்து, வழக்கிற்காக பொய்யாக

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மோளப்பிச்சி என்ற முத்தம்மாள் மற்றும் மோளப்பிச்சி என்பவர் வேறு வேறு நபர்கள் என்றாலும், 1ம் பிரதிவாதி சரியான தீர்ப்பாணையே பெற்றுள்ளார் என்றாலும் சரியல்ல. எனவே தாவாச் சொத்துக்களுக்கும், எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும், நான் உரிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றாலும், மேலும் உரிய பரிகாரமும் கேட்கவில்லை என்றாலும், எனவே நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு 1ம் பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.